940

உ

சிவகுகமயம்.

கங்களாஞ்சேரி

# ஸ்ரீ அங்காளம்மன் கோவில் உற்சவ அலங்கார

# வழிநடைப்பதம்

இஃது

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுகா வண்டாம்பாலை

யெலிமண்டெரிஸ்கூல் உபாத்தியாயர்

சி. வயித்திலிங்க பிள்ளை குமாரரும்

திருவிஜயபுரம்

முத்தமிழ்ப்புலமை

V. S. பாப்புதாசர் அவர்கள் மாணுக்கரிலொருவருமாகி

அருள்வாக்கு

S. V. முத்துதாசரா லியற்றப்பெற்றது

இரங்கூன்

மங்கமாரி வீதி 111-நெம்பர் நவீனகதா புத்தகசாலை

ப. கா. ஈஷிம்ஸா இராவுத்தர் கேட்டுக்கொண்டபடி

மதராஸ்

ரா. விவேகாநந்தா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1912

[இதன் விலை அணா-1

G25:417
M12
14856

உ

சிவமயம்.

# நூன்முகம்.

நெடிய கடல் சூழ்ந்த உலகின்கண் கல்வி அறிவொழுக்கங்களிற் சிறந்த கவிஞர்களனைவருக்கும் வந்தனம்.

ஐயன்மீர்— எமதன்பரி லொருவரும், புதுக்கோட்டை சமஸ்தானம் திருமயம் தாலூகா நாட்டாம்பட்டியில் வசிக்கும் சு. ப. சின்னையா பிள்ளை அவர்களும், நாகப்பட்டணம் தாலூகா தப்பளாம்புலியூரைச் சார்ந்த சிகாரில் வசிக்கும் ரூ. ம. வெ. சிங்காரவேலு பிள்ளை உபாத்தியாயர் அவர்களும், நாகை. வெளிப்பாளயம் குமாரகுரு வடிவேல் பிள்ளை அவர்களும், புத்தூர். சி. ராமசாமி பிள்ளை அவர்களும், நன்னிலம் தாலூகா வண்டாம்பாலை சு. இரத்தினப்பண்டாரம் அவர்களும், கங்களாஞ்சேரி மளிகை வியாபாரம் காத்தா பிள்ளை அவர்கள் குமாரர் பக்கிரிசாமி பிள்ளை அவர்களும், இரங்கூன் மங்கமாரி வீதி 111-வது நம்பர் நவீனகதா புத்தகசாலை மானேஜரவர்களும், இன்னும் சில அன்பர்களும், கல்விப் பயிற்சியில் எழுத்துப் பிறப்பிடத்தையறியாத என்னையும் பொருட்படுத்தி யிந்நூலியற்றக் கேட்டுக்கொண்டபடியால், இதில் 40 கவியில் அறிவே புருஷனாகவும் மனமே ஸ்திரீயாகவும் பொருட்படுத்தி, இவர்கள் தஞ்சை நகரத்திலிருந்து பிரயாணியாக, தஞ்சை நகர்ச்சிறப்பைச் சுருக்கமாய்ச் சொல்லி, ஷை ஸ்டேஷன் முதல் திருவாலூர் ஸ்டேஷன்வரை ஆங்காங்குள்ள ஸ்டேஷன்களைக் காட்டி, விஜயபுரம் சேந்தமங்கலம் வண்டாம்பாலை பொய்கைமாநத்தம் கங்களாஞ்சேரி ஸ்ரீ அங்காளம்மன் கோவில்வரையுள்ள சிறப்புகளை ஷை 40 கவிக்குள் சுருக்கி,

வழி நடைப்பதமெனப் பெயர் புனைந்து, அச்சிற் பதிப்பித்து, இரங்கூன் 54-வது நம்பர் கல்லீ 29-வது நம்பர் வீட்டில் அரங்கேற்றினமையால், இதைக் கண்ணுறும் புண்ணியர்கள் இதிலுள்ள வெழுத்தாதிக் குற்றங்களைக் கவனியாது, குணத்தையே கிரகித்து, அடியேனை ஆசீர்வதித்தருளத் தங்கள் மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றனன்.

இந்தப்படிக்கு,
அருள்வாக்கு
சி. வ. முத்துதாசர்,
நூலாசிரியர்.

By Mr. P. N. R. Pillay., M. C. P. (London.)

இலண்டன் நாரிஸ்காலேஜ் வித்வ சிகாமணிகளி லொருவராகியும், எம். சி. பி. எனும் வித்வ டிகிரி பெற்ற கணித ஜோதிடச் செந்தமிழ் வித்வான், பா. நா. இராமசாமிப்பிள்ளை என்பவரால் கூறிய

## சாத்துக்கவி.

எண்சீர் விருத்தம். (இவ்விரு கவியும் குளகம்)

எத்திசையும் புகழும்வண்ணாம் பாலை மேவு
மெழில் வைத்ய லிங்கனது தவத்தினாலே
புத்திரனாய் வந்தமுத்துத் தாசன் மிக்க
புகழுடைய வருள்வாக்காய்ப் புவியின் மீது
முத்தமிழைக் கண்டுமனம் கொண்டு தேர்ந்து
மூதறிவாற் கங்களாஞ் சேரி வாழும்
உத்தமியாம் கௌமாரி யம்மன் மீது
உள்ளன்பு கொண்டுகுரு வாக்கைப் பெற்று 1.

பத்திநெறி முறையாக வடியார் போற்றப்
பாருலகோர் தழைத்தோங்கப் பவங்கடோட
வித்தைபல வுண்டாக வினைகள் யாவு
மிரண்டோட நல்லிசைப்பேர் மிகவுண் டாகச்
சுத்தமொடு மிதைக்கண்ட யாவ ருக்கும்
சுகமான பேரின்பம் பெருக வேண்டித்
தித்திக்குஞ் சர்க்கரைதே னமுது போலத்
திறமான பதங்கண்டு பாடி னானே. 2.

அறுசீர் விருத்தம்.

திறமோங்கு தஞ்சைநகர் செயுந்தவத்தா
லொருங்குபலன் செழித்த தென்ன
முறையோங்கு நீதியுளா ருறையும்வண்
டாஞ்சேரி முனிவ னீந்த

உறையோங்கு தமிழ்பயிற்று முயரெலிமென்
டெரியிஸ்கூ லுபாத்தி யாயன்
அறமோங்க வருபுதல்வ னெஸ்விமுத்துத்
தாசனன்பா யறைந்தான் மன்னே. 3.

கங்களாஞ் சேரி மாரி
கௌமாரி மகமாயிக்குத்
தங்குபே ரன்பான் மாலை
தான்வழி நடையாய்ச் சொற்றான்
வெங்கய முரித்துப் போர்த்த
வேய்வரு முதல்வன் கண்டு
சங்கரி பெருமை பெற்றாள்
தனக்கிலை யென்று னன்றே. 4.

(Sd.) P. N. R. Pillay, M. C. P. (London.)

## அவையடக்கம்.

வாண்மணைச் சால கத்தின் வழிவரும் புன்னீ ரெல்லாம்
மீண்பயில் கங்கை சேரின் மிக்கநற் றீர்த்த மென்பார்
தேன்மலி மலர்சேர் கங்க ளாஞ்சேரி யம்பி கைமேற்
பான்மகிழ் வாச்சொற் சிந்து பதம்பெற்ற தென்ப ரம்மா.

## சித்திவிநாயகர்=வெண்பா.

சீர்வளர்கங்க ளாஞ்சேரி சிந்துதனைச் செந்தமிழால்
யேர்வளரப் பூவி லிசைப்பவே—வார்வளர்ந்த
கொங்கையுமை தந்தமத குஞ்சரமு கன்றனருள்
தங்குபத நன்கு துணை தான்.

## சரஸ்வதி=கலித்துறை.

பூவாய்ப்பிறந்துவெண் டாமரைப்போதுசெய் புண்ணியந்தான்
பாவா யுனதடிப் பத்தனுக் கென்று பலித்திடுமோ
காவா யெனத்தொழு மன்பர் துயரக் கடல்கடக்க
நாவா யெனுஞ்சீ றடியாய்வெண் டாமரை நாயகியே.

OFFICE OF ... BOOKS, REGISTERED 19 JUN 1912 MADRAS.

உ

கங்களாஞ்சேரி

# அங்காளம்மன்கோவில் உற்சவ அலங்கார

# வழிநடைப்பதம்.

---

விருத்தம்.

மங்களஞ்சேர் கங்களாஞ் சேரி மேவு
மகிமையங் காளம்மன் கோவிற் கீர்த்தி
தங்கிவள ருற்சவங்கள் யாவும் பார்க்கத்
தையலரே வழியேகு மலங்கா ரத்தைத்
துங்கமுட னேபதமாய்ப் பாட நாளுந்
துணையானைத் தும்பிவத னத்தான் றன்சீர்ப்
பங்கயமா மலர்ப்பதங்கள் போற்றி வாழ்த்திப்
பாடுவேன் மங்களங்கொண் டாடு வேனே.

---

இராகம்=தேசிகதோடி

பல்லவி.

கங்களாஞ்சேரி யங்காளம்மன் சன்னிதிக்
காட்சிபோய்ப் பார்க்கலாங் கண்ணே வாலைக்
கன்னியரே யன்னமென் னடையேகூடிக்
கலந்துவாடியென் பெண்ணே

அநுபல்லவி.

மங்களமார் தஞ்சா வூரிதுதானே
மாமலே ராஜமானகர் மானே
பங்கயமாது நிகர்த்திடுந் தேனே
பாரந்தனி லேருந்திய
கூரம்பினை நேரம்பதி (கங்க

சீரகச் சம்பாமிளகி ... னரிசி
தெளிவாகச் சாதமுஞ் ... சமைத்துப் ... பல
சித்திரமாக மூவாறுவகைக்கறி
செவ்வைய தாகவே ... யமைத்துக் ... கண
பூரணமாகப் பசிகளையாறிப்
புகழ் பெரியமனை ... யடுத்து ... எந்தன்
பூங்கிளியே உனக்காகும் உடைநகை
பூதாருப்பெட்டியை ... யெடுத்து ... வந்த
சீனத்தாவளி ஆயிரம்: ... பொன்பட்டு
சீக்கிரமாக விடைப்பி ... லணிந்தாக்க
கானமயிலே கருமுகிற் ... கூந்தலில்
காவுண்ணறை ... மேவும் பல
பூவுஞ்சர ... மணிவாயடி ... (கங்க)

கூந்தலுக்குமயிர் மாட்டியிட்டு ... இளங்
கோதே நெற்றிச்சுட்டி ... சூட்டு ... எந்தன்
கோதையேகாதணி நீத்துபுலாக்குடன்
கூர்விழியஞ்சனந் ... தீட்டு ... ஒளி
காந்தியெரிக்கும் நவரத்தினப்பொன்
கழுத்தினில் தாவடம் ... பூட்டு ... இளங்
கன்னியே கும்பஸ்தனந் தெரியாமற்
கனகரவிக்கையும் ... மாட்டு ... சித்ர

காப்பு வளயல்கை ... மோதிரங் கங்கணம்
காலிடுந் தண்டை ... கொலுசு பாதசரம்
வாப்பு முத்தாங்கி ... வடிவுள்ள காலாழி
வகையாயணி ... தொகையாகவே
யகமேபுக ... முக்மாதே நீ ... (கங்க)

அத்தர் புனுகு சவ்வாதுடன் சந்தன
மாகும்பலமண ... மணிந்து ... என
தத்தினியே வழிக்காகச் செலவுக்கு
ஐந்நூறு பொன்னெடு ... மிருந்து ... உனக்

குற்றவள்பாங்கி எழுவகைப் பெண்ணை
　　யுசப்புடன் கூட்டிக்க　　வுகந்து　　நமக்
குள்ளகுழந்தை யிருவகைப்பாலனை
　　யுத்தமியே தூக்கு　　யணைந்து　　வல்ல
கர்த்தனேயான வீஸ்வரனை　　நினைந்துக்க
காரண வெந்தன் குருவைப்　　புகழ்ந்துக்க
உற்றாரிடம்போ யுகப்புடன்　　சொல்லிக்க
　　உடைநன்குள　　இடைஇங்கித
　　மடமாதே நீ　　நடைகூடியே　　(கங்க)

தாரணியுங்குழன்மாநரசே மிகு
　　தாட்டிகமாய்வழி　　கூடி　　வளந்
தங்கியதஞ்சைநகரின் றெருக்களைத்
　　தான்கடந்தேசுயம்　　பாடி　　மிகு
நேருடனேதெரிகின்ற ரயில்ஸ்டேஷன்
　　நேர்த்தியைப் பார்மிகு　　மோடி　　ஜன
நெருக்கம்பார் டிக்கட்டை வாங்குகின்றாரிங்கே
　　நில்லுயான்போயங்கே　　யோடி　　சந்த
வாரணியுங்குல　　மங்கையே டிக்கட்டு
வாங்குகின்றேன்　　ஸ்டேஷன்மாஸ்டரைக்கேட்டு
காரணமாகவே　　வாங்கினேன்பாட்டு
　　கனமாமழை　　தினமேபொழி
　　அனமேரயில்　　தனிலேறடி　　(கங்க)

வண்டியிலேறினோம்பாரிதுபோகுது
　　மாரியம்மன்கோவில்　　முன்னே　　பாரு
வாசமுடன்விட்டுச் சாலியமங்கலம்
　　வந்தனம்பாரிது　　சொன்னேன்　　கலைத்
தண்டமிழ்வாணி யிதைவிட்டம்மாபேட்டை
　　தான்வந்து சேர்ந்தது　　மின்னே　　ஜன
சந்தடியாகுது ரயிலுமேகுது
　　தாண்டா மங்கலம்　　பொன்னே　　சுவைக்

கண்டுரைமாமயி லேயிதைநீங்கிக்
கண்டுகொண்டோங் குறடாச்சேரிபாங்கி
மண்டியபூமரச் சாலேயுமோங்கி
மரைசேர்குளிக் கரைபாரிது
விரைவாகவே வரலானது (கங்க)

வாலேப்பெண்ணே குளிக்கரையையும்விட்டு
வண்டியுமேகுது பாரு சுப
மங்களமாய்விஜயபுரம்ஸ்டேஷனே
வந்துகண்டோங்களி கூரு கன
சீலமுறுந்தஞ்சை நாகைமாயவரம்
செல்வமுத்துப்பேட்டை யூரு இந்தத்
திக்கிலிரண்டு வண்டித்தொடர் ஜங்கிஷன்
சீரிடம்பாரிது தேரு அனு

கூலமுள்ளவிந்த ஸ்டேஷனேநோக்கு
கோதையே பாலத்தின் மேலேறு ஜோக்கு
வேல்விழி டிக்கட்டைக் கொடு தமிழ்வாக்கு
மின்னேயிது சொன்னேனடி
கண்ணோதிப் பெண்ணேயுயர் (கங்க)

விருத்தம்

மலிமணிச் சதங்கைச் சத்த வண்டியின் கூட்டம் பாரு
புலிவலம் போகும் ரோட்டின் புதுமையைப் பாரு சீரு
ஜொலித்தமேன் மாடவீதிச் சோதிகண் டானந்தித்துக்
களித்தமா மாந்தர் கூட்டம் களப்புகள் பார்ப்பாய் பெண்ணே.

பங்கயமாதே கடந்துவா வெண்கல
பாத்திரங் கொள்கடை முன்னே கலேப்
பாரதியே சாமிநாத பிள்ளேயவர்
பழக்கடையி தென் கண்ணே மேனித்
தங்கமேபார் மணிராவு மிட்டாய்க்கடை
தானிது மங்கலப் பெண்ணே மிகு
சம்பன்னறு முகம்ம தலிஸாகிபின்
தன்மருந்துக் கடை மின்னே வீர

சிங்கம்பாப்பு தாஸரின் சுருட்டுக்கடை
தேனே சந்தைக்குப் போகின்ற வழிநடை
மங்களன் குப்புத் தம்பிராவுத்தர்கடை
மானேயிது தானேயுனை
நானேபிரி யேனோரதி (கங்க)

காமர்பூஞ் செங்கான்குப்பு தம்பிமளி
கைக்கடைமுன் ஜனக் கூட்டம் இரு
கண்மணியே யெல்லையம்மன் கோவில்விட்டுக்
காசுக்கடையைப்பார் நீட்டம் திவ்ய
மாமணமேகமழ் புஷ்பக்கடை முன்பு
மங்கையே ராடவர் கூட்டம் திரு
மங்கையே காய்கறிக்கடைகள் தாண்டியே
வந்துவிட்டோமேகொண் டாட்டம் கலை

நாமகளே புடவைக் கடையிது
நாகைக்குப்போகின்ற ரோட்டிதுமாது
சோமுபிள்ளை ஷாப்பிதுகவியோது
சுகசுந்தா மிகுவிந்தைகொ
ளகமுங்கிய புகழ்தங்கிய (கங்க)

உத்தமியேயிரும்புக் கடையைப் பாரு
ஓடம்போக்கியாற்றைப் பாரு மிகு
உல்லாசமாய்க் கடந்தோமே யாண்டாதெரு
உன்வரிச்செங்கணற் பாரு மனச்
சுத்தியாய்ப்பாதிரி பங்களாவைவிட்டுச்
சொல்லுங் கன்னார்மனைச் சீரு ராஜ
சுந்தரிகம்பி யிழுக்கும்பட்டாணிகள்
சோலைசெறிமனைச் சீரு தேவ

பத்திமிகுமெளட்வர் டச்சாபீஸ்பாரிது
பாங்குடன்மீன்தசை விற்குமார்க்கட்டிது
சித்திதருமையனார் கோவில்நேரிது
திருமாமதி பொருமாமுக
மருமாமண முறுபூரண (கங்க)

மூங்கிருடிசுல்த்தான் ரூவுத்தர்மளிகை
முன்னதோபார்கீழ வீதி சித்தி
முத்திக்கொள் சந்திரப்பாடி நாய்க்கர்வீடு
முன்முகப்பின்ஜக ஜோதி திருப்
பாங்கின்கடைகள் கீழக்கோபுரவாசல்
பாரைந்து தேர்நிற்கும் வீதி இந்தப்
பாரெங்கும்சொல்லரி தலங்காரத்தைப்
பண்பிணையேமநு நீதி இங்கு
தங்கிசுவாமி தரிசனத்தைக்கண்டு
தானேநாமேகுவோம் வீதிதனிற்சென்று
பொங்கமுடனே இப் பூதலத்தினின்று
புனிதத்தொடு பிணிபொற்பதம்
வனிதைக்கொடி யிதுவற்புதம் (கங்க)

வாராயடிவரங் கேளாயடிநம்ம
வள்ளல்தியாகேசரை நாடி நல்ல
வாமருளும்கமலாம்பி கையைப்பாராய்
வல்வினைதீர்க்கவே கூடி யிரு
கரங்குவித்துநல்ல கணேசரின்கமலக்
கழல்பணிந்தோமிங்கு தேடி திரு
கார்குழலேகூட தீப்பாராதனையைக்
கண்டுமகிழ்ந்தோமே பாடி இதோ
வந்தோம்வடக்குத்தெரு தாசிவீடுகள்
வணங்கிக்கொண்டுபோவோம் கோபுரவாசல்தள்
வாங்கும்பலசரக்கு கடைவீதிகள்
மற்றுத்தமி கொற்றத்தெரு
வுக்குச்செலு ரஸ்தாவிது (கங்க)

நாலுகால்மண்டபம்தோணுதுபாரதி
நல்லலங்காரத்தி னேர்த்தி மிகு
நாகரீசப்பேச்சுக்காரிசுக்காரு.
நாலிபரப்பிடுஞ் சீர்த்தி இள
வாலிபமாதேசுங்கான்கேட்டைப்பாரடி
மாதவத்தோர்புகழ் கீர்த்தி மேவு

வாசனையார்ந்ததியாகராஜபிள்ளை
மங்களன்சத்திரக் காட்சி திரு
மாதரசேதண்ணீர்ப் பந்தலைப்பாரு
வண்குளமுஞ்சேர்ந்த மங்கலந்தேரு
நீதிமலுக்கையனர் கோவில்நேரு
நிதியேதரு மதியேகண
துதியேமிகு பதியாகிய (கங்க)

விருத்தம்.

சுந்தர வதன மாதே சோதிசேர் தியாக ராஜ
விந்தைகொள் தேவர் வீடு விட்டியர் வண்டாம் பாலை
அந்தமாய்க் கண்டு மேல வெளியைநாம் பார்த்துப் போவோம்
சந்ததம் வாழி வாழி சகலசம் பன்ன மாதோ.

மன்னன் அருணசலம்பிள்ளைவீடிது
மாதரசேயலங் காரம் திரு
மாமயிலைவெங்கடாசலம்பிள்ளையார்
மாமனைபாருசிங் காரம் மிகு
நன்னயபூசிதன்பக்கிரியாபிள்ளை
நன்மனைபாரதி காரம் குல
நங்கைகாளியம்மன்கோவில்கீழ்வெளி
நாம்நடந்தேமநு சாரம் திருத்
தென்னன்சோமுபிள்ளை வீடிதுபாரு
தீரனும்பக்கிரிவன் னியரின்வீடு
மன்னுங்கடையுங் கடந்தனம்நேரு
மதியேநிகர் வதனயதி
விதமாகவே யிதமாய்நட (கங்க)

வெண்பா.

நானிலத்தோர் போற்றுசுப்ப ராயமுகி லீன்றகல்வி
மானிவெங்க டாசலவ ரோதயனின்— தேனிகர்த்த
மாமொழியாய் நேர்த்தி மளிகைக் கடைபார்த்துப்
பாமொழிவாய் வாழ்கமதிப் பாய்.

மிக்கசிறப்புள்ளசுப்பையாபண்டாரம் [ன்
மேன்மைசத்திர முன்னாலே சொல்வே
மேவிநடந்து வாவாவிதோவொன்று
விளங்குதுபாரு பின்னாலே அடி
திக்குத்திசைகளிலெங்குமிதுபோல்
தெரிசித்ததுண்டோ பெண்ணாளே தெளி
தேனொடுபால்மற்றேதேனுமிந்நீரைப்போல்
தித்திக்குமோசொல் பின்னாலே இங்கு
பக்கமோர்நான்கு கருங்கற்கள்
பளீர்பளீரென பகட்டுதேபடிகள்
இக்கணமிறங்கியுன் தாகத்தைதீர்த்துக்கொள்
இனும்பாரடி ஜனசேகரம்
கனமாகவே மூனந்தோணுது (கங்க)

சுத்தவெண்ணீருள்ளசத்திரத்துக்குள்ளே
சோலைநிழலில் வந்திருந்து கட்டிச்
சோறுகறிபழம்பாலு தயிருடன்
சூடும்பசிக்குண வருந்து திரள்
முத்தணிமாதேநீவெற்றிலைபாக்கிடு
முக்யவண்ணப்பெட்டி திறந்து வெகு
மூர்க்கமதாகவேதாம்பூலம்போட்டு
முறையாநடந்துவா சிறந்து இதோ
நண்பின்மிகுந்தவென் நாயகியேநில்லு
நாணமற்றுனக்கு வேணதைநீசொல்லு
பெண்கொடியேயிந்த நோட்டை.மாற்றிகொள்ளு
பிணைந்தெரி புளியந்தரு
வனைபந்தல் தோரணமும்பல (கங்க)

சுப்பையாபண்டாரமன்னசத்திரம்போல்
தொல்லுலகில் அரிதாமே குணச்
சுந்தரமானகவிமுத்துதாஸரின்
சோடினைமா மனையாமே மதி
செப்பிடுங்காரைக்கால்பிள்ளைபள்ளிக்கூடம்
சீர்வீடுதா னிதுவாமே திரு

சேயிழையேகப்பிரோட்டிலிருபுறஞ்
சேர்புளியால் மரந்தாமே இத்தி
பற்பலஜாதி விருக்ஷமும்பாரு
பறக்கும்பட்சி விஞேதங்கள்பாரு
கற்பகச்சோலை நிகர்த்திடுஞ்சீரு
கடிமாமலர் முடிசூடிய
வடிவேவளர் படிமேவிய (கங்க)

சொர்ன மதுபோலேசெந்நெல்விளைந்திடும்
V. சுப்பய்யாபிள்ளை நஞ்சை இன்னும்
சோதனையானரத்ன பண்டாரம்நிலம்
சொக்கிடச்செய்யும்நம் நெஞ்சை இங்கு
இன்னமும்பாருராஜாராமையர்பண்ணை
இதுதானீயெண்ணுதே பஞ்சை அடி
யேந்திழையேபட்டாமணியர்நிலத்திற்
கிணையோசமஸ்தானமு தஞ்சை நல்ல
மேன்மையுள்ளபிடாரி வாய்க்காவிதோமுன்னே
மேவிதலையாரி நஞ்சையதைநண்ணே
பூண்முலையாளே இங்கிருக்கிறபண்ணை
போகத்திலே போலொத்தது
லோகத்திலு மேதுபுகல் (கங்க)

வெண்பா.

பார்புகழும் லோக்கல்பவுண் டோர்சு மேஸ்திரி
சார்சுப்ர மண்யையர் தானவர்பார்—நேர்வளரும்
கண்ணே நவமணியே காரணமா பூரணமே
பெண்ணே நடந்தருளென் பின்னே.

தேவிஒற்றையாலமரங்கடந்தப்பால்
தீவிரமாய்ப்போக வேணும் இங்கு
திருடர்பயமுமுனிப்பயமும்ரொம்ப
சேஷ்டையாய்வந்திங்கு தோணும் அடி
தாவியமரத்தில்மந்திகுரங்குகள்
தங்கிநடந்திடில் காணும் கண்டால்

தக்ஷணமேநம்மைப்பக்ஷணம்செய்திடும்
தப்பினல்தானுயிர் பூணும் சகி
காவினங்களடர்ந்து வழிகூடுது
கார்வண்கூட்டங்கள் சங்கிதப்பாடுது
கூவிக்கூவிக்குயில்கள் சத்தம்போடுது
குறிதம்புரா மிருதங்கமும்
பொருதுங்குண முறுதிங்ஙனம் (கங்க)

காடையினங்கள்தன்பேடையைத்தேடிக்
கூசறுவதும்பெரு மோடி மணி
காகங்களும்பலபாகங்களாகக்கா
காவென்குதேஒரு கோடி இந்த
ஓடைகளிற்சலக்கிரிடைகள்செய்திடும்
வேதியரைககண்டு வாடிப் பெரு
ஓலமுழக்கும்குறவர்கள்யாழிசை
யூதுங்குழலைப்பார் நாடி நல்ல
வாடையுந்தென்றலுங் கூடியுல்லாசமாய்
வந்துவீசுதேமிகுந்து சந்தோஷமாய்
ஜாடைதெரிந்துநடந்து வாபாசமாய்
சரசக்கிளி மொழிசற்குணி
புருஷர்க்கித முறுலக்ஷணி (கங்க)

பொம்மாநதத்தின்தைக்கானிலமாமிது
பூங்கிளிபாரிது நீட்டம் திருப்
பூமனப்பாசாமிப்பண்டாரத்தின்மனைப்
புறங்களில்மயி லாட்டம் மனச்
சம்மதமாய்நடராமசாமிநாடார்
தங்கள்மதுக்கடை கூட்டம் மிகு
சல்லாபன்சாந்தப்பநாடாரின்வீடிது
தையலேபாருங்கண் ணோட்டம் துரைச்
செம்மல்துரைசாமி பிள்ளையைநோக்கு
சீர்கரயவரம்போ கின்றரோட்டு
அம்மணியேவெட்டார் பாலமுஞ்ஜோக்கு

14856
சென்னை-600

அந்தம்பிர　　　　பந்தந்திகழ்
நடதங்கன்　　　　சொந்தம்பெரு　　(கங்க)

கிள்ளைமொழியேபார்கம்மூலவிற்றண்ணீர்
　　கிழித்துக்கொண்டோடுது　　சுற்றி　　மடவை
கெண்டையயிரையுளுவையுடனே
　　கெளிறுபாய்ந்தோடுது　　நத்தி　　அடி
துள்ளிவிழுகின்றமீனைத்தன்வாயினால்
　　தூக்குதுபாருமீன்　　கொத்தி　　மிகச்
சொல்லிமுடியாதகொக்குமடையானும்
　　சூழவிருக்குது　　கத்தி　　அடி

கள்ளவிழ்மாமலர்　　கோதையதோபாரு
காட்டுப்புறுக்க　　ளிரைபொறுக்கும்சிரு
மெள்ளவேதாண்டினேம்　　பாலத்தைநீதேரு

　　விரைசேர்　　குழலானேயடி
　　பரிவாகவே　　நீபாராய்　　(கங்க)

வெட்டாரில்மேவுமணியம்சுப்பராய
　　வெற்றிமுதலியார்　　வீடு　　மிகு
வேகமுடன்கடந்தேலோக்கல்பவுண்டு
　　மேலிஞ்சினீரின்பூங்　　காடு　　கன
திட்டமுடன்பங்களாவையுமேவிட்டுச்
　　சிங்காரப்பூண்டிபோம்　　ரோடு　　மிகு
சீர்கொளயன்கரைசித்தார்தபப்பையும்
　　சேர்ந்தனம்பாரன்னப்　　பேடு　　நீதிச

சட்டமார்கோவிந்த　　நாயக்கரன்ன
சத்திரமுந்தண்ணீர்　　பந்தலுமின்ன
மெட்டுடனன்னவர்　　கண்மணியன்ன

　　மிகுமாதவ　　னெதிராஜலு
　　தகுதானமு　　மருள்வாரடி　　(கங்க)

நாமகனேயெத்திராஜலுநாயக்கர்
　　நன்குறுசத்திர　　மீதே　　யெந்த

நாளும்பஜனைநடத்திவருகிற
நாதமுழக்கந்தப் பாதே திரு
மாமகள் மேவும்சீத்தாராமையர்போஸ்டு
மாஸ்டரறிந்துகொள் மாதே நவ
மாமணிபோஸ்டுமேன்கோவிந்தசுவாமிபிள்ளை
மன்பஜனைதவி ராதே மிகு

க்ஷேமமாயெப்போதும் சத்திரம்வாழ்கவே
சிர்சுப்பராய முதலியார்தம்மனை
நேமமுடன்தோசை விற்குதுபார்மன
நீதம்பிர போதம்பிர
சாதங்கலே நாதந்தரு (கங்க)

மட்டுப்படாதஜெயசிங்கமாகிய
மண்டலத்தோர்புகழ் தீரர் மிகு
வாழ்வுநிறைந்தகுபேரர் K. பக்கிரி
சுவாமிபிள்ளைமிக தீரர் அடி
கட்டியிருக்கின்றமளிகைக்கடைகளைக் [ன்
கண்டாயோபாருப காரர் பொன்னி
கஞ்சமலர்முகவஞ்சியர்கண்மடல்
கைக்கொளுங்கர்ணவ தாரர் நாமும்

சட்டமுடனவர் தன்மனைபோய்க்கண்டு
தானேபசியாறித் தாம்பூலமுமுண்டு
இஷ்டமுடனேநாம் இங்கிருந்துகொண்டு
யேந்திழையே போவோமடி
சாந்தகுண சீலரடி (கங்க)

மன்மதவேள்குழந்தைவேலுப்பத்தரின்
மாமனைபாரடி மானே குண
வாரிதியானகிர்ஷ்ணபிள்ளைகடையிது
மங்களங்கூறடி தேனே கொடைக்
கன்னனுங்கோவிந்தசெட்டியாரெண்ணெய்க்
கடையிதுன்கண்ணிணை மீனே நிகர்

காரணிபாவாடைப்பிள்ளையரிசிக்
சடைநடப்பூர்வாய்க்கால் தானே நட

அன்னங்குச்சிப்பாளயம் போகுமார்க்கம்
ஆனலயன்கரைமேவி ஞேந்தீர்க்கம்
பண்ணுமம்மீசுபு ராவுத்தாக்கம்
படர்பொன்மனை தொடர்சந்தத
மிடருந்தவி ரடல்கொண்டுயர் (கங்க)

தீரன்ராமசாமியையருப்புக்கடை
செல்வியேபாருன் கண்ணாலே மிரு
சீர்சாத்தமங்கலம்பக்கிரியாபிள்ளைச்
செல்வன்கடையு முன்னாலே ஜெய
மாரனும்பாக்கியஞ்செட்டியெண்ணெய்க்கடை
மாவளம்பாரு மின்னாளே திரு
வாழுந்திருக்குடந்தைக்கோவிந்தாசாரி
மாமனை பாரும் பெண்ணாளே உப

காரம்புரிபோஸ்ட்மேன் கோவிந்தசாமி
கண்ணியன்வீடிது பாரடிகாமி
சாரங்கம்பிட்டி லெத்திசைவாமி
சரிசாரித கரிகாரிச
பரிபாகித சுரமேபகர் (கங்க)

சீத்தக்காரக்கோவிந்தம்பிள்ளைவயித்தி
லிங்கம்பிள்ளை வீடு சாமி ஆசா
ரீசுப்பராயலுநாயக்கர்வளையல்
நிதமும்விற்குங்கடை நேமி மிரு
பாத்திரஞ்சேர்மாயூரம்போகும்ரோட்டிது
பாரிருளப்பனா டாரின் திருப்
பாவையரோகள்ளுக்கடையுந்தாணிது
பையநடந்துவா பூமி நிதி

கீர்த்தியிதுமான் சாராவுத்தர்வீடு
சேள்சத்திரத்துத் திருக்குளம்நாடு
நேர்ததிசிங்காரஞ் செட்டியார்ஸ்கூலிலே

நிதமுங்கவி பதமும்படி
யிதயங்களி யதுபொங்கிட (கங்க)

சாம்பசிவப்பிள்ளைவீட்டைக்கடந்துநாம்
சையோகமாய்லோக நாதன் பிள்ளை
தான்ஞெட்டிவிற்குங்கடையிதுநாகூர்க்குத்
தாரையிதுமுத்து வேலன் மனை
காம்பிரமாய்க்கடந்தேவீரப்பாசாரி
கட்டிடம்பார்மனைச் சிலம் சிவ
காமியேசாமியாசாரியின்பட்டரை
கண்டுகொள்வாய்மிகு போதன் கன
சாம்பிரதாயன் முத்துவேலாசாரி
தன்மரப்பட்டரை பாரிதுகோரி
நாம்பிரதானமு டன்வழியூரி
நாட்டத்துடன் கூட்டத்துடன்
ஆட்டத்துடன் பாட்டத்துடன் (கங்க)

மாதேசுயம்பிரகாசம்பிள்ளைவீடு
வாழிகாத்தாயம்மன் கோவில் திணம்
வாழ்முனியார்நிற்குமிடமுந்தாண்டியே
மாடடைக்கும்பவுண் டாவில் பாரு
சாதுகிர்ஷ்ணசாமிநாயக்கர்வீடிது
சங்கீதம்பாடுபொன் னுவில் திருத்
தையலரேஎதிராஜுலுநாயக்கர்
தன்மனைக்கட்டிடம் நேரில் சன
நீதமிகும் பிள்ளையார் கோவில்மாது
நேர்மதன்கொட்டகை பார்கவியோது
சீதமிகும்புளியந் தோப்புக்கீது
செல்லும்வழி யிதுப்பாரடி
முல்லைமலர் குழல்சூடிய (கங்க)

வாசன்கலியபெருமாள்பிள்ளைமனை
மங்கையேபார்சொக்க லிங்கம் செட்டி

மாமனைகோவிந்தபிள்ளைகண்ணுசாமி
மாமனைபாரொளிர் தங்கம் மிகு
நேசமுள்ளான்சாமிநாதபிள்ளைவம்பு
லிங்கப்பத்தர்மனைச் சங்கம் கன
நேர்த்தியாய்ச்சுப்பய்யாபண்டாரம்மனைக்கு
நேமமாய்வந்தனந் தங்கம் குண

தேசன்வண்டிக்கரு தேசன்பண்டாரமும்
சீர்மதவேள்கந்த சாமிபண்டாரில்லம்
பூசனைசெய்பழனி பண்டாரம்வீடு

பொன்னேவிழி முன்னேயழ
கென்னேயுரை சொன்னேனிது (கங்க)

மங்கைகுமளக்குடிமாணிக்கம்வள்ளல்
மாமனைபாரிது சீரு சுப
மங்களனைசட்டையப்பபிள்ளையின்
மாமனைதானிது நேரு ஜெய
சிங்கங்குமாரசாமிபிள்ளைவீடிது
தேமொழியே களிகூரு நல்ல
செல்வன்வாக்குடிபக்கிரிப்பிள்ளைமனை
சித்திரமாயிது தேரு மிகு

சங்கையுள்ளானிரு ளப்பபிள்ளைவீடு
சாமியார்ராமசாமி பிள்ளையின்வீடு
துங்கரங்கசாமி வாண்டையார்வீடு

தொடர்பாகவே நடைகூடியே
மடமாமயி லடைவோமடி (கங்க)

வெட்டிவாய்க்கால்பொன்னுசாமிபிள்ளையவர்
வீட்டையுந்தான்கடந் தோமே மிகு
வெற்றிபொருந்துநாராயணபிள்ளையின்
வீடுங்கடந்தனந் தாமே நீதிச்
சட்டந்தெரிந்தரங்கசாமிபண்டாரம்
சால்மனைதாண்டிவிட் டோமே மிகு

சற்குணன் பக்கிரிப்பண்டாரம்வீட்டையும்
தாணைகடந்துவர் தோமே கலைப்
பெட்டகனப்பா துரைபிள்ளை வீடிது
பேர்கஞ்சமலை பிள்ளை அவர்வீடிது
மெட்டுயர்சத்ரக் காத்தாபண்டாரம்வீடு
மிகுசுந்தா ககனுந்திய
புகழ்மிஞ்சிய மகசம்ப்ரம (கங்க)

அன்னநடையேநடேசன்பிள்ளையின்
ஆனந்தமாமனை பாரு மிகு
ஆண்மையுள்ளான்சுப்பையாபிள்ளை வீடிது
ஆரணங்கேகளி கூறு கன
சொர்ணம்வளர்வாருடிமங்கலத்தம்மாள்
சோபிதம மனை சேரு நிதிச்
சுந்தாநாட்டாண்மைக்காரர்சபாபதி
சோமனிசர்மனை நேரு ஒளி
மண்ணும்பக்கிரியா பிள்ளைமனையிது
மனைபூரமாரியப்ப பிள்ளைவீடிது
நன்றுசெய்கமலப்ப பிள்ளைவீடிது
நளினத்தொடு குளிர்முத்தொளி
ஒளியுற்றிடு வழியுற்றதி (கங்க)

வெட்டிங்காயம்கண்டமாலைசிரங்கு
வியாதிகளைச்சுக மாக்கும் குண
வீரனென்னும்சுப்புபண்டிதன்வீட்டையும்
விட்டுநடந்தனங் தீர்க்கம் நறு
மட்டுலவுமங்காளம்மன்கோவில்பாரு
மாறுதலங்கார யோக்யம் நவ
மாமணிமாலைகள்நாற்றியபந்தலின்
வாசனைநாசியிற் றுக்கும் ரதி
மெட்டுளவாலைப்பெண் ணேகிளியேயென்
மேசகைக்கேற்றவினே தக்கண்ணேயுன்
பட்டுடைக்குஞ்சிற் றிடைக்குமேநானுன்

பாதத்துணையே முத்திட
நீதத்துடனே பத்திசெய் (கங்க)

பூங்கரசங்கொண்டுசெல்லுமலங்காரம்
பூவையேசொல்லவொண் ணுதே கண
பூர்த்தியுடனிருளமுகவேஷமும்
பூரிக்கும்பார்க்கநன் ருயே மிகு
ஆங்காரியாம்பேச்சியாயிதன்வேஷமு
மானந்தம்பாடுவர் மாதே தண
லக்கினிக்கப்பரைக்கங்கைக்கரகமு
மாங்கிரவில்வரும் போதே ஒரு
சாங்கோசமின்றி மனங்களிப்பாரே
சற்குணமேதகை கூறுவர்யாரே
மாங்குயிலேகவி மங்களங்கூரே
மதிதங்கிய நிதிதங்கிய
துதிதங்கிய கதிதங்கிய (கங்க)

## விருத்தம்

ற்குண மானே தேனே சலசலட் சுமியே கண்ணே
மக்கள்மேற் கிருபை செய்யு மான்மியத் திருவே யிந்த
முக்கிய தலங்கள் கண்டோ முறையுட னின்னு மந்த
அக்கிர காரம் பார்க்க அன்புட னென்பின் வாராய.

பாதிப்பகல்பனிரண்டுமணிக்குப்
பகருமுருத்திரன் வேஷம் போட்டுப்
பாங்குடனேசுடுகாட்டுக்குப்போயெலும்பு
பட்சித்தல்பார்த்தால்வி சேஷம் மிகு
சோதியுடன்வீதிசுற்றிவருமந்தச்
சோடிணைபார்பிர காசம் கண
சோபனவையன்குளம்பிடாரிகோவில்
சொல்லையனூர்கோவில் வாசம் மண
நீதியுடன்சிவன் கோவிலைப்பாரு
நின்னையன்சுப்பையர் வீடிதுசீரு
ஆதிக்கணக்கப்பிள் ளைசீனிவாச

ஐயன்மனை மெய்யின் துணை
செய்யுங்குண மூய்யுந்தவ (கங்க)

சித்தாராமையர்போஸ்ட்மாஸ்ட்டரின் வீடிது
சித்திரமார்தபாற் கூடம் கனம்
சேர்த்தபெரியமாப்பிள்ளையார் வீடு
சின்னமாப்பிள்ளையர் மாடம் கவின்
பூத்தசாமாவையர் வீடிதுபார்மிகு
பொன்னியரேகல்விப் பீடம் கர்ன
பூரணநாராயண்சாமியையரின்
புங்கமிகுமணி மாடம் தவ

மூர்த்திராமசாமி யையர்மனையிது
முக்கியராஜகோ பாலசுவாமிதன்
தீர்க்கன்பெருமாள்கோ வில்சுப்பையாபிள்ளை
திருமேவிய மதிமாமலர்
நறுபூம்பொழி விதுதானடி (கங்க)

மன்னன் சரவணப்பூசாரிதன்மகன்
மால்சுப்பையாபிள்ளை மாரன் இந்த
வையகமெங்கும்புகழ்
மாவலங்காரஞ்செய் தீரன் திருப்
பொன்னியரோதியேயவர்மாமனைப்
புத்திரர்வாழியொய் யாரன் மனப்
பூரணமாகவேகங்களாஞ்சேரி
புகழ்பெறங்காளம்மன் வாழி சுப

நன்னயம்பெற்றுஉற் சவம்நடந்தேற
காவலர்காவலர் யாவரும்வாழ்க
மன்னுமும்மாரி பொழிந்துலகோங்க
மங்களமங் களமங்கள
மங்களமங் களம்வாழியே (கங்க)

அக்கினிக்கப்பரைதன்னலங்காரமு
மாகாயவாணமத் தாப்பு மிகு

அழகுடன்தெருமீதினிற்றீவட்டி
அலங்கிர்தங்களை நோக்கு ஜெக
மெய்க்கமேளதாளத்தோசையண்டமுடி
வெடிபடும்படி யார்க்குந் தெரு
வீதிவருமலங்காரமும்பெண்கள்மா
விளக்குப்போடுறார் ஜோக்கு மிகு
வெற்றியங்காளம்ம னுக்குச்சாத்துபடி
மெல்லியேசாத்தி யிருக்கிறார்பாரடி
சித்தமருளாளியைப் பார்சீரடி
ஜெகமீதினி லிதுபோலதி
ஜயமேயிலை மிகுமோகன (கங்க)

காரைக்கால்பிள்ளைவீட்டுக்குவாகாம்சென்று
கண்ணியமாய்ப்பசி யாறி மிகு
காம்பீரமாயெழுந்தேசுப்பையாபிள்ளை
கற்பகந்தவனஞ் சாரி நல்ல
தீரமுடன்சுற்றிப்பார்த்சனமாணிக்கத்
தேவரின்வீடிதொய் யாரி கன
செல்வன்தஞ்சைநகர்வீரப்பப்பிள்ளைவீடு
சேமமுறக்கவி கூறிச் சிந்து
சொன்னசீனுவானு முத்துதாஸன்வாழி
செல்வமிகுமங் காளம்மனும்வாழி
பங்கயமாது சிரோமணிவாழீ
படிமீதுறு மடியார்களு
மிடியாதுயர் குடிவாழிய

கங்களாஞ்சேரி யங்காளம்மன் சன்னிதிக் காட்சியைப் பார்க்கலாம் பெண்ணே.

——:o:——

கங்காளரஞ்சேரி
அங்காளம்மன் கோவில் உற்சவ
அலங்கார வழிநடைப்பதம்
முற்றிற்று.

148561
600 008

# விளம்பரம்.

இதனால் சகலமான தன கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— இந்நூலாசிரியர் இயற்றிய இரங்கூன் சிங்கார வழிநடைப்பதம், கம்பை சிவசுப்பிரமணியர் ஏசல், வண்டாம்பாலை மாரியம்மன் கோவில் உற்சவ அலங்கார வழிநடைப்பதம், அதிநூதன அலங்காரக் கீர்த்தனை, இரங்கூன் பசுமந்தான் தெண்டாயுதபாணி பதிகம், இன்னம் ட்ராமா வர்ன மெட்டுகளால் கவிசெய்த ஜாவளிகளும், பிரிண்டுசெய்து சீக்கிரம் வெளிவரும். அரை அணா ஸ்டாம்பு அனுப்பினவர்களுக்குக் கங்களாஞ்சேரி ஸ்ரீ அங்காளம்மன் கோவில் உற்சவ அலங்கார வழிநடைப்பதமும், இரங்கூன் கம்பை சிவசுப்பிரமணியர் ஏசலும ஆக இரண்டு புத்தகம் இனமாக அனுப்பப்படும்.

இங்ஙனம்

அருள்வாக்கு: S. V. முத்துதாஸர்,

நூலாசிரியர்.

இந்தப் புத்தகம் வேண்டுபவர்கள் இதன் கீழ்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை ரூபா 0 1 0

மேல்விலாசம்:

சி. வ. முத்துதாஸர் உபாத்தியாயர்,
வண்டாம்பாலை,
வெட்டூர் Post.

கா. பக்கிரிசாமி பிள்ளை,
மளிகை வியாபாரம்,
கடைத்தெருவு,
கங்களாஞ்சேரி,
வெட்டார் Post.

நவீனகதா புத்தகசாலை,
111 நம்பர், மங்கமாரி வீதி,
இரங்கூன்.

உ

# விளம்பரம்.

## நவீனகதா புத்தகசாலை.

### நவீன நாவல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| குடும்ப சம்ரக்ஷணி ... ... ... ... | 2 | 0 | 0 |
| கலாவதி ... ... ... ... ... | 1 | 8 | 0 |
| கமலாக்ஷி ... ... ... ... ... | 1 | 8 | 0 |
| போஜசரித்திரம் ... ... ... ... | 1 | 8 | 0 |
| மோகனாங்கி ... ... ... ... ... | 1 | 4 | 0 |
| ஸுசீலா ... ... ... ... ... | 1 | 0 | 0 |
| கிருஷ்ணவேணி ... ... ... ... | 0 | 12 | 0 |
| கண்ணியின் முத்தம் ... ... ... ... | 0 | 12 | 0 |
| சுந்தரிமனோஹரன் ... ... ... ... | 0 | 12 | [illegible] |
| தீனதயாளு ... ... ... ... ... | 0 | 8 | [illegible] |
| ஆரியகுமாரி ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| ஜெயத்ஸேனா ... ... ... ... ... | 0 | 8 | 0 |

N. B. இதில் குறித்திராத இனிய செந்தமிழ் நாவல்களும் வேதாந்த கிரந்த புத்தகங்களும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குரிய சகலவித புத்தகங்களும் மகமதியர்க்குரிய கித்தாப்புகளும் காலிகெட், கண்ணனூர் செக்துணிகளும் இன்னும் ஈரான் முதலிய வாசனை திரவியங்களும் எங்களிடம் விற்பனைக்குத் தயாராகவிருக்கின்றன. வேண்டுவோர் அடியிற்குறித்த விலாசத்திற்கு எழுதினால் வி. பி. மூலியமாய் அனுப்பக்கூடும். விலாசம் தெரிவித்தால் விலைஜாப்தா இலவசமாய் அனுப்புவோம்.

மானேஜர்:

நவீனகதா புத்தகசாலை,

111, மங்கமாரி வீதி,

இரங்கூன்.